Previous Date of examination : 27.06.2022

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஜூலை மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 58 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஸ்குமார் | வயது | 34 /2022 |
| தகப்பனார் பெயர் | செல்வராஜ் | ஜாதி | |
| தொழில் | தனியார் வேலை | மதம் | |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது கும்பகோணத்தில் வசித்துக்கொண்டு சென்னையில் உள்ள தனியார் கம்பெனியில் அக்கவுண்ட் மேனேஜராக வேலை பார்க்கிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரி சக்தி (எ) சக்திவேலை தெரியும். எனது மாமா ஜெயகீர்த்தன் குடவாசலில் உள்ளவர். அவரும் ஐ.டி.ஐ. வைத்துள்ள செல்வமும் நண்பர்கள். அவர்கள் மூலம் 1வது எதிரியை தெரியும். திருவாரூர் நீதிமன்றத்தில் உதவியாளர் பணி இருப்பதாகவும் 1வது எதிரி சக்திவேலை தொடர்புகொள்ளுமாறு எனது மாமா சொன்னார். 2018ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் 1வது எதிரி சக்திவேலிடம் பேசினேன். வேலைக்கு ரூ.2 லட்சம் செலுத்த வேண்டி இருக்கும் எனவும்,ரூ.1லட்சத்தை அட்வான்ஸ்வாக கொடுக்க வேண்டும் என்றும் 1வது எதிரி சொன்னார். நான் ஒரு வாரம் தாமதம் செய்தேன். அதன் பிறகு கேட்டதற்கு திருவாரூர் கோர்ட்டிற்கு பணம் வாங்கிவிட்டதாகவும், பக்கத்தில் உள்ள வேறு கோர்ட்டில் இதே போன்ற வேலை இருப்பதாகவும், அங்கு வாங்கி தருவதாகவும் சொன்னார். பின்னர் பணத்தை தயார் செய்து ஜூலை மாதம் 2வது வாரத்தில் 1வது எதிரிக்கு வந்து ரூ.1லட்சம் பணம் மற்றும் எனது எம்ளாமெயிண்ட் கார்டு, டிகிரி சான்றிதழின் செராக்ஸ் நகல் கொடுத்தேன். எப்படி வாங்கி தருவீர்கள் என்று விபரம் கேட்டதற்கு கோவிந்தலெட்சுமி என்பவர் கோர்ட்டில் வேலை செய்வதாகவும், அவர் 1வது எதிரியின் வீட்டில் குடியிருப்பதாகவும், அவர் மூலமாக வாங்கி தருவதாகவும்

சொன்னார். பின்னர் 1 மாதம் கழித்தும் வேலை வரவில்லை. நான் அடிக்கடி போன் செய்து கேட்டுக்கொண்டிருந்தேன். அவ்வாறு ஒரு நாள் மாலை நான் போன் செய்தபோது 1வது எதிரி கிடைத்துவிடும் என்றும் வேண்டுமென்றால் கோவிந்தலெட்சுமியிடம் கேட்டு தெரிந்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி போனை கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்தார். அப்போது கோவிந்தலெட்சுமி என்னிடம் கொஞ்சம் டிலே ஆகிக்கொண்டிருக்கிறது. ஒரு மாதத்தில் கிடைத்துவிடும் என என்னிடம் சொன்னார். அதன்பிறகு ஒரு மாதம் முயற்சித்து வேலை வரவில்லை. 1வது எதிரியின் போன் சுவிட்ச் ஆப் என வந்தது. அதன்பிறகு நேராக விசாரிப்பதற்காக நானும், எனது மாமா முத்துராஜ்வும் 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு வந்தோம். அப்போது 1வது எதிரி வீடு பூட்டியிருந்தது. அருகில் இருந்த மெக்கானிக் ஷாப்பில் கேட்டபோது இதுபோன்று நிறையபேர் வந்து போகிறார்கள். 1வது எதிரி வீட்டில் தற்போது யாரும் இல்லை என்று சொன்னார்கள். அதன்பிறகு புகார் கொடுக்கலாம் என்று இருந்தபோது திருவாரூர் எஸ்.பி. ஆபீஸ் இருந்து போன் செய்தார்கள். நீங்கள் பணம் கொடுத்துள்ளீர்களா என்று கேட்டார்கள். நான் விபரத்தை சொன்னேன். போலிசார் என்னை வரச்சொன்னதால் திருவாரூர் எஸ்.பி. ஆபீஸ் வந்து நடந்த விபரத்தை சொன்னேன். அவர்கள் எழுதிக்கொண்டார்கள். அதன் பின்னர் 83 நபர்கள் என்னை போன்று ஏமாற்றப்பட்ட விபரம் தெரியவந்தது. 1வது எதிரியை கைது செய்ததாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

1வது எதிரி சக்திவேலை நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி என்னிடம் நேரடியாக வேலை வாங்கி தருவதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நேரடியாக சக்திவேலிடம் பேசினேன். வேலை வாங்கி தருவதாக சொன்னார். 2018ம் வருடத்தில் ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். செல்வம் மூலம்தான் சக்திவேலை பார்த்தேன் என்றால் செல்வம் தகவல் சொன்னார். நான் நேரடியாக சக்திவேலை பார்த்தேன். செல்வம் என்ன தகவல் கொடுத்தார் என்றால் சக்திவேலின் தொடர்பு எண்ணை கொடுத்தார். அதன்பிறகு சக்திவேலை நேரில் பார்த்தேன் என்றால் சரிதான். சக்திவேல் விவசாயம்பார்த்து வருவதாகவும்,வீடு கட்டி வாடகைக்கு விட்டுள்ளதாகவும் அதன் மூலம் வருமானம் வருவதாகவும் என்னிடம் சொன்னார். 1வது எதிரி வசதியான குடும்பத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். 1வது

எதிரிக்கு ஐந்து பகுதியாக வீடுகள் உள்ளதாகவும், அதில் ஒரு வீட்டில் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி இருப்பதாகவும் சொன்னார். 1வது எதிரியிடம் பணம் கொடுத்தபோது எனது மாமா முத்து ராஜ் என்பவரும் வந்திருந்தார்.செல்வம் வரவில்லை. 1வது எதிரி நீதிமன்றத்தில் வேலை பார்க்கவில்லை என்ற விபரத்தை தெரிந்துக்கொண்டேன்என்றால் சரிதான். எந்த அடிப்படையில் கோர்ட்டில் வேலையில் இல்லாத 1வது எதிரியை நம்பி நான்பணம் கொடுத்தேன் என்றால் 1வது எதிரியின் வீட்டில் குடியிருக்கும் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி மேஜிஸ்ரேட்டிடம் வேலை செய்வதாக சொன்னதால் பணம் கொடுத்தேன். கோவிந்தலெட்சுமி திருவாரூர் கோர்ட்டில் வேலை செய்வதாக சொன்னார். கோவிந்தலெட்சுமி நீதிமன்றத்தில் வேலை பார்க்கிறாரா என்று நேரில் வந்து விசாரிக்கவில்லை. நான் ஒருமுறை 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் 1வது எதிரியின் போன்மூலம் பேசியுள்ளேன். 2 வது எதிரி என்னிடம் கொஞ்சம் டிலே ஆகிறது, 2 வாரம் அல்லது 1 மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். வழக்கிற்கு மூலக்காரணமே 2 வது எதிரி என்றும், 2 வது எதிரி சொல்லிதான் 1வது எதிரி பணத்தை வாங்கி கொடுத்துள்ளார் என்றால் நான் 1வது எதிரியிடம் கேட்டபோதும் 2 வது எதிரியிடம் பணத்தை கொடுத்துவிட்டதாகவும், அதனால் என்னை போன்மூலம் 2 வது எதிரியிடம் பேசுமாறு 1வது எதிரி சொன்னார். 2 வது எதிரி பணத்தை 1வது எதிரியிடமிருந்து வாங்கி ஏமாற்றியதால் 1வது எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் பின்னிட்டு விசாரித்தபோது செல்வம் அந்த விபரத்தை சொன்னார். போலிசார் என்னை போன் செய்து வரச்சொன்ன பின்னர் நான் எஸ்.பி. ஆபீஸ் போனேன் என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரித்தபோதும் சொன்னேன்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் முதல் விசாரணையில் நீதிமன்றத்தில் சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரித்தபோதும் சொன்னேன் என்றால் சரிதான். சக்திவேலிடம் நான் கொடுத்த பணத்தை கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். எதிரி சக்திவேல் என்னிடம் பணம் தருவதாக சொன்னாரா என்றால் பணத்தை 2 வது எதிரியிடம் கொடுத்துவிட்டதாகவும், அவர் மீது புகார் கொடுத்துள்ளதாகவும் சொன்னார். 1வது எதிரி என்னிடம் பணத்தை தந்துவிடுவதாக ஆசை வார்த்தை கூறியதால் அதனை நம்பி 2 வது எதிரியை முதன்முறையாக வழக்கில் தொடர்பு படுத்தி போலிசார் விசாரணையில்

சொன்ன விபரங்களை குறிப்பிட்டு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னை ஏமாற்றுவதற்காக 2வது எதிரி 1வது எதிரியின் வீட்டில் குடியிருந்ததாகவும்,அவரிடம் பேசுமாறு சொல்லி போனை கொடுத்ததாகவும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. 2வது எதிரியிடம் 1வது எதிரி எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1வதுஎதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க முதன்முறையாக 2வது எதிரியை தொடர்புபடுத்தி நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால்சரியல்ல.

Previous Date of examination : 27.06.2022

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஜூலை மாதம் 07 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ.சா. 59 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுவாமிநாதன் | வயது | 74 /2022 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் பிள்ளை | ஜாதி | |
| தொழில் | கணக்கப்பிள்ளை | மதம் | |
| ஊர் | தென்னவராயநல்லூர் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தென்னவராயநல்லூரில் வசித்துக்கொண்டு அடகு கடையில் கணக்கப்பிள்ளையாக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எங்களது அடகு கடையான சரவணா அட்கோ-வில் கடுவங்குடியை சேர்ந்த சுரேஷ் என்பவரின் மனைவி மாலதி என்பவர் எங்களது அடகு கடையில் 2018-2019 வருட வாக்கில் நகை அடகு வைத்தார். எவ்வளவு நகை அடகு வைத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னிடம் வந்து கேட்டபோது எங்களது கடையில் இருந்த எங்களது ரசீதின் அடிக்கட்டையை பார்த்து போலிசாரிடம் மாலதி நகை அடகு வைத்த விபரத்தை சொன்னேன். போலிசார் என்னிடம் ஆவணத்தை வாங்க வில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பகுதியாக பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டது. ( அரசு தரப்பில் கு.வி )**

மாலதி எனது கடையின் வாடிக்கையாளர் என்ற முறையில் எனக்கு தெரியும். மாலதி அங்கன்வாடியில் வேலை பார்க்கிறார். எனது மகன் திருநெய்பேர் என்ற பஞ்சாயத்தில் வேலை பார்க்கிறான். அந்த பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அருகில் அங்கன்வாடி உள்ளது என்றால் சரிதான். மாலதி பணம் தேவைபடும்போது எங்களது கடையில் அடகு வைப்பார் என்றால் சரிதான். நகை அடகு வைக்கும் நபர்களிடம்

அவர்களின் குடும்ப விபரத்தை கேட்டு தெரிந்துக்கொள்ளும் வழக்கம் எனக்கு கிடையாது. மாலதி தற்போது எப்படி உள்ளார் என எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் மாலதிக்கு பக்கவாதம் வந்து பாதிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார். வாடிக்கையாளரின் குடும்ப கஷ்டத்திற்கு ஏற்ப தொகை கூடுதல், குறைவாக கொடுப்போம் என்றால் அவ்வாறு கொடுப்பதில்லை. நகையின் மதிப்பிற்கு ஏற்ற தொகையை கொடுப்போம். மாலதி என்னிடம் அடகு வைக்க வரும்போது அவரது கணவருக்கு கோர்ட்டில் வேலை வாங்குவதற்காக பணம் தேவைபடுவதாகவும், அதனால் தொகை கூடுதலாக கொடுக்க கேட்டார் என்றும், அதேபோல் வேலை கிடைத்தவுடன் பணத்தை திரும்ப தருவதாக சொன்னார் என்றும், அந்த விபரங்களை போலிசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் தற்போதும் நகை கடையில் கணக்கப்பிள்ளையாக வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். எங்கள் கடைக்கு நகை அடகு வைக்கும் நபர்கள் எதற்காக நகை அடகு வைக்கிறோம் என்ற விபரத்தை சொல்லமாட்டார்கள் என்றால் சரிதான். நகை அடகு வைக்க வரும் நபரிடம் செல்போன் நம்பர் மற்றும் ஆதார் கார்டு நகல் வாங்குவோமா என்றால் கடந்த 2 மாதங்களாகதான் வாங்குகின்றோம். அதற்கு முன்பு கிடையாது. நகை அடகு வைக்கும் வரும் நபரிடம் முகவரி கேட்டு எழுதிக்கொள்வோம் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் மாலதி என்னிடம் நகை எதுவும் அடகு வைக்கவில்லை என்றும், நான் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத சாட்சி என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)** - இல்லை என்று தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.